SOCIETY FOR RIGHTS OF ALL WOMEN WITH DISABILITY

# மாநில அனைத்து மாற்றுத்திறன் மகளிர் வாழ்வுரிமை அமைப்பு

(தமிழ் நாடு மாற்றுத்திறனுடையோர் சங்கங்களின் கூட்டமைப்பு & இந்திய மாதர் சங்கத்துடன் இணைந்தது)

எண்:21AA, முதல் தளம், ஏரிக்கரை சாலை, கோட்டூர், சென்னை – 600 085

தொலைபேசி எண் - 044-32956759; தொலை நகல்: 044-24405584

**Web Site: www.sfrawd.com; E-Mail: sfradw@gmail.com**


# விண்ணப்ப படிவம் - தனி நபருக்கு

## "மலாலா மாற்றுத்திறன் மகளிர் சாதனையாளர் விருது – 2014"

### விருது பெறும் விண்ணப்பதாரர்களின் விவரங்கள்:

| | |
|---|---|
| பெயர்: | |
| ஊனத்தின் தன்மை & விழுக்காடு | |
| முகவரி | |
| தொலைபெசி எண்: | தொலை நகல்: |
| மின்னஞ்சல் | |
| பிறந்த தேதி மற்றும் வயது | |
| கல்விப் பிண்ணனி | |

| |
|---|
| தாங்கள் செய்யும் பணி விவரம் |
| பணித்தள முகவரி: |
| தங்களின் முக்கிய சாதனைகள் (பட்டியலிடவும்) |

## பரிந்துரை செய்பவரின் விவரங்கள்:

| |
|---|
| பெயர் |

| |
|---|
| சங்கங்கள் / தன்னார்வளர்கள் / தொண்டு நிறுவனங்கள் பெயர்: |

| |
|---|
| தாங்கள் வகிக்கும் பதவியின் பெயர் |

| |
|---|
| முகவரி |

| | |
|---|---|
| தொலைபேசி எண்: | தொலை நகல்: |

| |
|---|
| மின்னஞ்சல் E-mail: |

| |
|---|
| தாங்கள் பரிந்துரை செய்யும் மாற்றுத்திறன் மகளிரின் சாதனை குறித்த விவரம்? |

| |
|---|
| தாங்கள் பரிந்துரை செய்யும் மாற்றுத்திறன் மகளிர் எதிர்காலத்தில் மாற்றுத்திறன் மகளிரின் வளர்ச்சிக்கு செய்ய வேண்டிய தலையாய பணிகள் குறித்த விவரம்? |

| தாங்கள் பரிந்துரை செய்வதற்கான காரணங்கள்? |
| --- |
| |

| |
| --- |
| தேதி:<br>கையெழுத்து: |

தங்களை இந்த சாதனையாளா் விருதுக்கு பரிந்துரை செய்தமைக்கு நன்றி! தயவு கூவுர்ந்து தாங்கள் இந்த விண்ணப்பத்தை பூர்த்தி செய்து எங்களுக்கு எதிர்வரும் 20/10/2014 க்குள் அனுப்பி வைக்குமாறு வெண்ழவிரும்பி கேட்டுக் கொண்டிருக்கிறோம்இ இதற்குரிய தபால் அல்லது மின்னஞ்சல் வாயிலாக அனுப்பலாம். (31/10/2014 க்கு மெல் வரும் விண்ணப்பங்கள் தேர்விற்கு ஏற்று கொள்ளபடமாட்டாது). கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்த நடுவா் குழுவால் முறையாக விசாரிக்கப்பட்டு தோ்ந்தெடுக்கபடுவா். மலாலா விருதிற்கு தோ்தெடுக்கப்படுபவா்களுக்கு ரொக்கமும், பாராட்டுப் பத்திரமும் மற்றும் விருதும் அளிக்கப்படும்.

இணைப்பு:

1. தற்பொது எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவு புகைப்படம்
2. தாங்கள் சாதனைக்கான ஆவணங்கள் புகைப்படங்கள் சான்றிதர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிக்கான அடையாள அட்டை.
3. விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் பொருந்தவில்லை என்றால் தனியாக ஒரு வெள்ளை தாளில் விவரமாக மேற்கூறிய தலைப்புகளில் பூர்த்தி செய்யவும்.

# “மலாலா மாற்றுத்திறன் மகளிர் சாதனையாளர் விருது – 2014”

மலாலா விருது வழங்குவதில் எங்கள் அமைப்பு பெருமைப்படுகிறது. மலாலா என்ற வீர சிறுமியின் தியாகத்தையும், மனித உரிமைக்காக, மகளிர் உரிமைக்காக அச்சமற்று போராடி அகில உலகிலும், ஐ.நா.சபையிலும் போற்றப்படும் இந்த இளம் வீர மங்கையை, தனது வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டு மாற்றுத்திறன் பெண்கள் தனது துன்பங்களையும், கஷ்ட்டங்களையும் புறம் தள்ளி முன்னேறுவதற்கான குறியீடாக இந்த விருதை வழங்குவதில் நாங்கள் பெருமைப்படுகிறோம். ‘மாநில அனைத்து மாற்றுத்திறன் மகளிர் வாழ்வுரிமை பேரவை’ இந்த மாற்றுத்திறனாளிகள் தின விழாவை இன்று சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறது. இந்த நிகழ்வின் மூலம் மாற்றுத்திறன் பெண்களின் உரிமைச் சார்ந்த பிரச்சனைகள் மாற்றுத்திறன் பெண்களின் வாழ்வாதாரம் சார்ந்த பிரச்சனைகள், மாற்றுத்திறன் பெண்களின் மீது நடைபெறும் பல்வேறு வன்முறைகள் சார்ந்த பிரச்சனைகள், குறித்தும் இவைகளிலிருந்தெல்லாம் தங்களை மீட்டெடுத்துக் கொள்ள மத்திய, மாநில அரசுகள் மற்றும் மனிதநேயமிக்க தொண்டு நிறுவனங்கள், மனிதநேயமிக்க சமூக பெரியவர்கள் ஆகியோரின் அன்பையும், ஆதரவையும் பெறுவதற்காகவே இந்நிகழ்வை நடத்துகிறோம்.

மாற்றுத்திறனாளிகள் உலக மக்கள் தொகையில் 100 கோடி அளவு உள்ளதாக ஐ.நா. அவையின் பொதுச் செயலாளர் திரு.பான்கிமூன் அறிவித்துள்ளார்கள். இந்தியாவில் 10 கோடிக்கும் மேல் மாற்றுத்திறனாளிகள் உள்ளதாக உலக வங்கியின் கணக்கெடுப்பு தெரிவிக்கிறது. இதில் சரிபாதிக்கும் கீழ் பெண் மாற்றுத்திறனாளிகள் உள்ளன. இவர்களுக்கான உரிமைகள் பாதுகாக்கப்பட ஐ.நா. சபையின் மாற்றுத்திறனாளிகள் கொள்கை, பிரகடணம் வலியுறுத்தியுள்ளது. இதனை இந்திய அரசு ஏற்றுக் கொண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்துயிட்டுள்ளது. இச்சூழ்நிலையில் இந்தியாவில் மாற்றுத்திறனாளிகளுக்காக புதியதாக வெளியிட உள்ள வரவுள்ள உரிமைச்சட்டத்திலும் மாற்றுத்திறன் பெண்கள் வாழ்வுரிமையை பாதுகாக்கும் கொள்கையை அரசு சிறப்பு கவனம் எடுக்க வேண்டிய நிலை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான பல்வேறு நலத்திட்டங்களும், அரசு ஆணைகளும், முக்கிய உரிமைகளும் கிடைத்துள்ள போதிலும் மாற்றுத்திறன் பெண்களுக்கான சிறப்பு திட்டங்கள் கொண்டுவருவதற்கான அவசியத்தை வலியுறுத்திட இந்த நிகழ்ச்சியை மாற்றுத்திறன் பெண்கள் உள்ளனர். அனைத்து வகை மாற்றுத்திறன் மகளிர் வாழ்வுரிமை பேரவையின் துவக்கப்படுவதற்கு முன் 13 ஆண்டுகாலமாக ‘தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் சங்கங்களின் கூட்டமைப்பு’ அதன் அறக்கட்டளையும் மாற்றுத்திறன் பெண்களுக்கான தனி அமைப்பையும் செயல்படுத்தி 13 மாநாடுகள் நடத்தி பல்வேறு கோரிக்கைகள் அரசிடம் வலியுறுத்தும் பணிகளை ஆற்றி வந்துள்ளது.

எங்கள் அமைப்பு தொடர்ந்து மாற்றுத்திறன் பெண்களுக்கான சுய உதவிக்குழுக்கள் அமைப்பது, சுய வேலைவாய்ப்புக்கான பயிற்சித்திட்டங்களை நடத்துவது, சுய வேலைவாய்ப்புக்கான தொழிற்கூடங்களை உருவாக்கித்தருவது, மாற்றுத்திறனாளிகள் தயாரித்த பொருள்களை விற்பதற்கான சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தித்தருவது, மாற்றுத்திறன் பெண்களுக்கு சட்டரீதியான உதவிகள், மருத்துவ ரீதியான உதவிகள் கிடைக்க செய்ய பணியாற்றி வருகிறது. மாற்றுத்திறன் பெண்களுக்கு மூன்று சக்கர வண்டி, வீல்சேர் மற்றும் காது கேட்கும் கருவிகள் பிற உபகரணங்கள் கிடைக்கவும் உதவி வருகிறது.

எங்கள் அமைப்பு மாற்றுத்திறன் குழந்தைகளுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் ஆலோசனை கூட்டங்கள் நடத்துவது, மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை, நோட்டு, புத்தகங்கள், புத்தக பைகள் கிடைக்க செய்வது. மாற்றுத்திறன் பெண் சாதனையாளர்களுக்கு மற்றும் குழந்தைகளுக்கு விருது வழங்கி சிறப்பிப்பது. மற்றும் பள்ளி, கல்லூரி கல்வி படித்த மாற்றுத்திறன் பெண்களுக்கு வேலைவாய்ப்பு முகாம் நடத்தி முக்கியமான கணினி தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவது.

மேலும், தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் மாற்றுத்திறன் பெண்கள் சங்கங்களை கட்டமைப்பது, மாற்றுத்திறன் பெண் சேவையாளர்கள், தலைவிகள் ஆகியோருக்கு தொடர்ந்து ஆளுமை பயிற்சி, தலைமை பயிற்சி வழங்குவது போன்ற பணிகளையும், மாற்றுத்திறன் பெண்கள் விளையாட்டு போட்டி, கலை இலக்கிய போட்டி ஆகியவற்றின் பங்கேற்க ஊக்கப்படுத்தி வழிக்காட்டுவது, மற்றும் ஸ்ரீகீதாபவன் அறக்கட்டளையோடும் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பின் அறக்கட்டளையோடு இணைந்து மாற்றுத்திறன் பெண்களுக்கு ஆண்டுதோறும் சுயம்வரம் மற்றும் இலவச திருமணங்கள் நடைபெற முழுமையாக உழைப்பது போன்ற பல்வேறு பணிகளை எங்கள் அனைத்து வகை மாற்றுத்திறன் மகளிர் வாழ்வுரிமை பேரவை தொடர்ந்து செயலாற்றி வருகிறது. எங்கள் பேரவை வருங்காலத்தில் முக்கிய தொண்டு நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள், அரசு நிறுவனங்களோடு இணைந்து மாற்றுத்திறன் குழந்தைகள், குறிப்பாக பெண் குழந்தைகள் மாணவர்களின் நலன்களுக்காக பாடுபடுவதை சிறப்பு திட்டமாக ஏற்று பணியாற்ற உள்ளது.

எங்கள் அனைத்து வகை மாற்றுத்திறன் மகளிர் வாழ்வுரிமை பேரவை தமிழக அளவிலும், இந்தியளவிலும், உலகளவிலும் மாற்றுத்திறன் பெண்கள் உரிமைக்காகவும், நலனுக்காகவும் நடைபெறும் கருத்தரங்குகள், கொள்கை தயாரிப்பு கூட்டங்கள், மாநாடுகள் ஆகியவற்றின் பங்கேற்று பணியாற்றும் இயக்கமாக செயல்படுகிறது. இதுபோன்ற நிகழ்வுகளில் முக்கியமாக அமெரிக்காவில் நடைபெற்ற மாநாட்டிலும், ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற மாற்றுத்திறன் மகளிர் மாநாட்டிலும் பங்கேற்ற சிறப்பும் எங்கள் மகளிர் அமைப்பின் நிர்வாகிகளுக்கு கிடைத்தது என்பது முக்கிய குறிப்பாகும்.எங்கள் ‘மாநில அனைத்து மாற்றுத்திறன் மகளிர் வாழ்வுரிமை பேரவை’ மாற்றுத்திறனாளி பெண்கள் அமைப்பை பெரியளவில் கட்டமைக்க தமிழக அளவிலும், இந்தியளவிலும் மகளிர் உரிமைக்காக பாடுபடும் அனைத்து பெண்கள் இயக்கங்களோடு இணைந்து பாடுபடவும் உறுதிக் கொண்டுள்ளது.

இந்த “உலக மாற்றுத்திறனாளிகள் தின” நிகழ்ச்சியின் மூலம் எங்கள் ‘அனைத்து வகை மாற்றுத்திறன் மகளிர் வாழ்வுரிமை பேரவை’ தமிழக அரசின் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மற்றும் மாவட்ட மறுவாழ்வு அலுவலகம் மற்றும் மாற்றுத்திறன் பெண்களுக்காக சேவை செய்யும் தொண்டு நிறுவனங்கள், சமூக சேவையாளர்கள் மற்றும் எங்கள் அமைப்பின் ஆக்கப்பூர்வமான பணிகளுக்கு ஆதரவாக செயல்படும் மனிதநேய பெரியவர்கள் மற்றும் சென்னையிலும் இதர மாவட்டங்களிலிருந்தும் வருகைத்தந்திருக்க கூடிய அனைத்து நல் உள்ளங்களோடு இணைந்தும் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் அறக்கட்டளையின் நிர்வாகிகளோடு இணைந்தும் இந்த விழாவை கொண்டாடுவதை பெருமையாக கொள்கிறோம்.